
# கூட்டாஞ்சோறு

(புனைகதை)



முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

# கூட்டாஞ்சோறு

(புனைகதை)

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகன்**

## நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூற்பெயர் | : கூட்டாஞ்சோறு |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரனார் |
| முதலாம்பதிப்பு | : சிலை தி.பி. 2050 (கி.பி. 2019 திசம்பர்) |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 13.7 வெள்ளைத்தாள் |
| அளவு | : தெம்மி 1/8 |
| பக்கம் | : (iv) + 36=40 |
| படிகள் | : 300 |
| விலை | : உருவா 30. |
| நூலாக்கம் | : தி பிரிண்டிங்கு அவுசு<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431- 202421 |
| வெளியீடு | : திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006<br>9442760616 |
| கிடைக்குமிடம் | : திருவள்ளுவர் நிலையம்<br>&<br>பி. தமிழகன்<br>2, பிச்சையம்மாள் நகர்<br>காசாமலை<br>திருச்சிராப்பள்ளி - 23<br>9940704702, |


❖❖❖

## கூட்டாஞ்சோறு

பகையாக நின்ற குடும்பங்கள் ஒன்றுபடுவதன் விளக்கம் இக் கூட்டாஞ்சோறு; இது வீட்டுக் கூட்டாஞ்சோறு, ஊர்க் கூட்டாஞ்சோறு இல்லாமல், உலகக் கூட்டாஞ்சோறாகும் உயர்நிலைக்கு நடையிடுகின்றது; இது குறுங்கதையே எனினும் நெடுங்கதைப் பொருளை உள்ளடக்கியது.

பிறவித் தொண்டர் திருமிகு மதிவாணர்; ஊராளுநர்; மாநிலப் பொறுப்பாண்மையர். யான் காவிரிக்கரைத் திருவள்ளுவர் **தவச்சாலை தொடங்கிய** 1994 ஆம் ஆண்டுமுதல், நட்பாகிய திருவாளர்கள் **மலைக் கொழுந்தர், மணிவண்ணர், அரங்க.கணேசர்** வழியால், உறவாகியவர் மதிவாணர். அதன்பேறு, மாநில ஊராட்சித் தலைமையர்களும் ஊராட்சியாளர்களும் என் தொடர்பினர் ஆயினர்.

மதிவாணர்க்குப் **பணி நிறைவு**. அப்போது தம் தந்தையர்க்கு **நூற்றாண்டு நினைவேந்தல் விழா**. இரண்டையும் ஒருங்கிணைத்து, மாநாடெனத் திருச்சிராப்பள்ளியில் நிகழ்த்தினர். யான் வாழ்த்துநருள் ஒருவன். அதனுடன், **பழநாள் ஊராட்சி முறைபற்றிய நூற்படைப்பும் செய்தவன்**. அவ்விழாவின் கொடைப்பேறு இந்நூலின் கொடையாயிற்று.

மதிவாணர், குடிநலம் போற்றல், முதியர்ப்பேணல் முழுதுறுதொண்டு இவற்றை எண்ணினேன். யான் தொடர்ந்து எழுதிவரும் கதைகளுள் ஒன்றான இக்கூட்டாஞ்சோறு அவர்தம் கொடை வழியால் வெளிவருகின்றது.

வழக்கம்போல் பதிப்பாசிரியர் முனைவர் பி. தமிழகனார், அச்சீடு; திருச்சிராப்பள்ளி அச்சுக்குழும்பு, அனைவர்க்கும் நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

## "கூட்டாஞ்சோறு"


| வரிசை | உள்ளுறை | பக்கம் |
|---|---|---|
| 1. | எங்கள் தலைப்பிள்ளை | 1 |
| 2. | கையசைத்து வழியனுப்பினர் | 3 |
| 3. | வெறுங்கை | 5 |
| 4. | எனக்குக் கற்பித்த பாடம் | 7 |
| 5. | பணப்பெட்டி | 10 |
| 6. | அரிய விருது | 13 |
| 7. | திருமணக் கதை | 17 |
| 8. | முதியோர் இல்லம் | 20 |
| 9. | ஊருக்கும் நாட்டுக்கும் | 22 |
| 10. | ஆய்தப்புள்ளி | 26 |
| 11. | தாயில்லை பேய் | 28 |
| 12. | தரமே மூலமும் முதலும் | 31 |
| 13. | கூட்டாஞ்சோறு | 33 |

# 1. எங்கள் தலைப்பிள்ளை

"அம்மா, விடுமுறை முடிந்தது; நாளைக்காலையில் புறப்படுகிறேன். பொன்னம்மாளைப் பார்த்துக் கொள்;"

"என்னிடம் ஏன் சொல்கிறாய்? நான் என்ன அவளைப் பார்த்துக் கொள்வது, அவளிடம் சொல்; "அம்மா சொன்னபடி நடந்து கொள்" என்று, வெறுங்கழுதைக்குப் பொன்னம்மா என்று பெயர். நீயாகத் தாலிகட்டிக் கூட்டிக் கொண்டு வந்தாய்! எனக்கும் அவளுக்கும் என்ன உறவு? என்தலையில் கட்டி விட்டு நீ போய்விட, அந்தத் திமிர் பிடித்தவளுக்கு நான் ஆக்கிப் போட்டு 'அம்மா அரசியே' என்று பார்த்துக் கொள்ள வேண்டுமாம்!"

"நீ சொன்னதை என்னம்மா, அவள் கேட்கவில்லை?"

"நான் காட்டு வேலைக்குப்போய் உன் அண்ணனையும், உன்னையும் படிக்க வைத்தேன். நடுக்காட்டுல என்னை விட்டுப்போன உங்கப்பன், சொத்திலேயா படிக்கவைத்தேன். அவன் நல்லாப் படித்ததாலே பள்ளிக் கூடத்து வாத்தியான்; அவனுக்கு வந்தவளும் வாத்தியாள்; அவர்களுக்கு நான் வேலைக்காரி; அது ஒழிந்தால், இப்பொழுது உன் வீட்டுக் காரிக்கு வேலைக்காரி;"

"அம்மா என்னை, என்னவேண்டுமானாலும் சொல்லுங்கள்; என் வீட்டுக்காரியை என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்; அண்ணனும் அண்ணியும் உங்கள் கொடுமை தாங்காமல் தானே தனியாகப் போனார்கள். அவர்களை ஏன் இழுத்து இப்போது பேசுகிறீர்கள்?"

"அவர்களைச் சொன்னால் உனக்குப் பொத்துக் கொண்டு வருதோ?"

"அப்பாவுக்குப் பின்னால் என்னைப் படிக்கவைத்து இந்தப்பட்டாளத்து வேலையில் சேர்த்துவிட்டதால் தானே நாலு காசு தேடி வாழ்கிறோம்."

"நாலு காசு தேடுறதால் நான் வாழ்கிறேன் என்று என்னைக் குத்திக் காட்டுற; நீ தேடுற காசை உன் பெண்டாட்டிக்கே அனுப்பு; என் வெற்றிலை பாக்குக்கும் அவளிடம் பிச்சைக்காரி போலக் கையேந்தி நிற்க வை."

**வாயே திறவாமல் விம்மி விம்மி அழுது கொண்டு நின்றாள் பொன்னி;** அடுத்த வீட்டில் இருந்த அண்ணி அன்னம், பொன்னி அழுகை தாங்காமல் வந்து, **தாம் பெற்றபிள்ளையாக அழைத்துக் கொண்டு, தம் வீட்டுக்குப் போனாள்.**

"அம்மா, எட்டாத் தொலைவுக்குத் தம்பி புறப்படுகிறான். அவனை நல்ல சொல் சொல்லி அனுப்பி வையுங்கள். பொன்னியை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்குப் பிள்ளை இல்லை. **எங்கள் தலைப்பிள்ளை அவள்.**"

"தம்பி, செல்லையா பணத்தை அம்மா பேர்க்கே தவறாமல் அனுப்பு. பொன்னியை உன் அண்ணி பார்த்துக் கொள்வாள்."

"நீயும் உன் பொண்டாட்டியும் அவளைப் பார்த்துக் கொண்டால், என்னைப் பார்க்கிறது யார்? சோறாக்க, வீடுகூட்ட, பற்றுத்தேய்க்க யார்?"

"ஒரு வேலைக்காரி வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சம்பளத்தை நாங்கள் தந்து விடுகிறோம்."

"உன் உறவும் உன் பெண்டாட்டி உறவும் வேண்டாம் என்று தள்ளி வைத்தவடா நான். உன் சம்பளத்தில் எனக்கு வேலைக் காரியாம்."

அன்னம் வந்தாள், "எதுவும் பேசாமல் வீட்டுக்கு வாங்க; என்றாள்." தலை குனிந்து நல்லையா அன்னத்தின் பின் வந்தார். தம்பி கும்பிட்டதைப் பாராமல் பொறுமிக் கொண்டு தாய் **தனம்மாள்** வீட்டுள் சென்றாள்.

ஜைஷ

## 2. கையசைத்து வழியனுப்பினர்

"செல்லையா, அண்ணன் நல்லையா வீட்டுக்குப் போனான். அண்ணி அன்னம், "**தம்பி முகத்தைக் கழுவு; அந்தக் கழுவுதலோடு நடந்ததையும் கழுவித் துடைத்துவிடு; வண்டிக்கு நாம நால்வரும் போவோம்**" என்றார்.

அண்ணன் முன்னர், அண்ணி காலில் விழுந்தான் செல்லையா; "அண்ணன் கூடப்பிறந்தவன் என்பதற்காக, என்னை உங்கள் பிள்ளையாக வளர்த்தீர்கள்; இப்பொழுதும் என் மனைவிக்குத் தாயாக நீங்களே உள்ளீர்கள்; இப்படி **நடமாடும் தெய்வங்கள் அங்கங்கு இருப்பதால்தான், "திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை**" என்னும் பழமொழி ஏற்பட்டது போலும்" என்றான்.

"என்னப்பா நீ, பெரிய பெரிய பேச்செல்லாம் பேசுகிறாய்; தந்தைக்குப் பின் யார், தம் ஐயனாம் தமையன்தானே; எங்கள் கடமை தானே; எந்தக் கவலையும் இல்லாமல், எடுக்க வேண்டியதை மறவாமல் எடுத்துக் கொண்டு புறப்படு; **இவர் ஊருக்கே நல்லையா? உனக்கும் நல்லையா தானே**; ஊருக்குக் கட்டாயம் வேண்டியது கல்வி என்று பள்ளிக் கூடம் திறந்ததுயார்? வேலைக்கு வந்த நானும் அவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு கணவன் மனைவி ஆனதால், உள்ளூர்ப்பிள்ளைகள் பக்கத்தூர்ப் பிள்ளைகள் எனப் படிக்க வைத்த கல்விக் கொடையாளி இவர்தாமே. இவர் கொண்ட தொண்டும் துணையும் கொண்டுதானே, நான் நடையிடுகிறேன். பொழுதாகிறது புறப்படுவோம்" என்று புறப்பட்டனர்.

வீடு திருநகர்க்குத் தென்பக்கம் இருந்ததால் அதற்குத் **தென்னகர்** என்பது பெயர்.

அண்ணன் தம்பியை நோக்கி, "இணைந்த வீடுகளாக அப்பா **அழகப்பன்** கட்டினார். ஆதலால் **வீடு இரண்டு என்றாலும் முற்றம் ஒன்றே**" என்றார். முற்றத்துக்கு வந்து செல்லையா பார்க்க, அம்மா கதவைச் சாத்தி இருந்தார். வாயிலைப் பார்த்து வணக்கமிட்டு விட்டு, நால்வரும் மதுரைத் தொடரிச் சந்திப்புக்குச் செல்ல மகிழ்வுந்து ஏறினார்

சந்திப்பின் நுழைவாயிலில் பொன்னியின் அன்னை **அருளாயி** நின்றார்.

பொன்னி தன் அன்னையைக் கண்டு ஓடிப்போய்க் கழுத்தைப் பற்றி மாலைபோல் தழுவினாள்; செல்லையா மாமியை அறிவான். நல்லையாவோ அன்னமோ அறியார்; தந்தை **தங்கவேல்** பொன்னியின் காதலை வெறுத்தாலும், தாய் அருளாயி தன் ஒப்புதலை வெளிப்படுத்தாமல், ஒப்பியவளாகவே இருந்தார். செல்லையா படைத்துறையில் இருந்து விடுமுறையில் வந்ததும், திருப்பரங்குன்றம் கோயிலில் திருமணம் செய்து கொண்டதும், பதிவுத் திருமணமும் ஆனதும் அறிந்தே இருந்தாள். பொன்னி தன் தோழிவழியே கணவர் இன்று விடுமுறை முடித்துச் செல்வதும் சொல்லியிருந்தாள்.

அன்று தங்கவேல் ஊரில் இல்லாமையால் அருளாயி வாய்ப்பாக வழியனுப்பலுக்கு வரமுடிந்தது.

செல்லையா மாமியை வணங்கினான். **என் பொன்னியைத் தந்த தெய்வம் நீங்கள். இவர்கள் என் அண்ணன் அண்ணி அல்லர், பெறாமல் பெற்ற தாய் தந்தைத் தெய்வங்கள்.** ஒன்றற்கு மூன்று தெய்வங்களிடம், **என் உயிருக்கு உயிராம் பொன்னியை ஒப்படைத்து நிறைவோடு நான் வண்டியேறுகிறேன்** என்று விடைபெற்றான் செல்லையா; நல்லையா முதல் அனைவரும் வண்டி தெரியுமட்டும் கையசைத்து நின்று வழியனுப்பினர்.

ஹஷ

## 3. வெறுங்கை

பொன்னியை அருளாயி தனியே அழைத்தார். கல்விக்கண் திறக்கும் நல்லையா அன்னம் இணையரை நான் நன்றாக அறிவேன். உன் மாமி இயல்பும் அறிவேன். அவளை வழிப்படுத்த ஒரே ஒரு வழி; **உன் மனத்துள் வைத்துக் கொள்**; என்று காதோடு காதாகச் சொன்னார்.

"**படமெடுத்து ஆடும் பாம்பு நெடுநேரம் ஆடாது; ஆடும் வரை ஆட விட்டுவிட்டால்**, பெட்டிக்குள் அடங்கிவிடும். நான் பத்தாம் வகுப்புப் படிக்கும் போது, ஆசிரியர் '**பணம்**' என்றால் '**பாம்பு**' என்பது பொருள் என்றார். அந்தப் பணம் பத்தும் செய்யும். உனக்காகச் செய்த சங்கிலிகள் மெல்லியது, கெட்டியானது, இரட்டை வடம் என மூன்று; வளையல், தோடு என்பனவும் ஒரு தொகையும் உள்ளது. நாளைக்காலையில் உன் மாமியை வணங்கி, நான் சொல்லிய படி செய்துவிடு; படமெடுக்கும் பாம்பு அடங்கிப் போகும்; அவள் பெயர் '**தனம்**' தானே; **சரிதானே** என்றார்!"

**கண்ணீர் விட்டு அழுது தாயைக் கட்டிப் பிடித்தாள். "இனி நீ கண்ணீர் விடாதே! அப்பாவும் இளகிய மனத்தவர்தாம்**! அவர் நினைத்த மணமகன் வேறொருவர்! ஆதலால் வெறுத்தார்; இனி, வரவர **உன்னைக் கண்ணே மணியே என்று போற்றிய பழைய தந்தை ஆவார்**" என்றார் அருளாயி.

ஒதுங்கி நின்று பேசிய அவர்கள் நல்லையா, அன்னத்தை நெருங்கினார்.

**நான் பெற்றதாய் என்பதை மறக்கவில்லை. உற்ற தாயாகிய அன்னம்மைபோல என்னால் கடமை செய்ய முடியவில்லை; உங்கள் இருவர்க்கும் இணையாகக் கணவன் மனைவியைக் காணல் அரிது. எங்கள் பாரத்தை நீங்கள் ஏற்று விருப்போடு செய்கிறீர்கள். இவளுக்குத்தாயும் தந்தையும் நீங்களே! நாங்களும் விரைவில் உங்களோடு சேர்ந்து விடுவோம்" என்றார் அருளாயி!**

அம்மா அருளாயி என்றால் நீங்கள் அருளாயி ஆகவே உள்ளீர்கள்; எங்கள் இருவருக்கும் கிடைத்தற்கு அரிய பிள்ளையை வழங்கியதற்கு, உங்களுக்குத்தான் நாங்கள் கடமைப் பட்டுள்ளோம்! தென்றலடிக்கும் தென்னகரும், திருவமைந்த திருநகரும் கூடி, அடுத்த விடுமுறையில் செல்லையா வரும்போது "கூட்டாஞ் சோறு" உண்போம் நன்றி என்றனர்.

அருளாயி வண்டி திருநகர் சென்றது.

நல்லையா பொன்னம்மை வண்டி தென்னகர் சென்றது. போகும்போதே சமையல் பொருள்கள் வேண்டுவ எல்லாம் அன்னம்மை வாங்கி விட்டார்.

மாமி இருக்கும் வீட்டுக் கதவு திறந்திருந்தது கண்ட அன்னம்மை, "இப்பொருள்களை உன் மாமி சமையலறையில் கொண்டுபோய் வைத்து விட்டுவா" என்று பொன்னியிடம் சொன்னார்.

பொன் வீட்டுள் போவது கண்ட மாமி, "இவை எதற்கு?" என்றாள்;

"நாளைச் சமையலுக்கு"

"யார் சமைப்பது?"

"நான் சமைப்பேன்; உங்களுக்கு நானே படைப்பேன்;"

"இதையார் வாங்கியது?"

"நானே வாங்கினேன்;"

"யார் பணம்?"

"என் பணம்;"

"வெறுங்கையோடு தானே வந்தாய்;"

"பையில் இருப்பது, கைக்கு வரும் வரை வெறுங்கைதான்; பையில் இருக்கும் தங்கம், கழுத்துக்கு வரும் வரை வெறுங்கழுத்துதான்;"

எதுவும் பேசவில்லை

–மாமி காலைத் தொட்டு வணங்கினாள்;

– மகிழ்வோடு மீண்டாள்.

ஐஐஐ

## 4. எனக்குக் கற்பித்த பாடம்

பொன்னி தன்பையில் இருந்து அம்மா தந்த பொருள்களைப் பார்க்கச் சொன்னாள்.

"அம்மா கொடுத்தாலும் நீ வாங்கலாமா?"

"என் பெட்டியில் எனக்காக இருந்தவை."

"இந்தப் பணம்"

"என் திருமணத்திற்கு முன்னமே அம்மா அப்போது அப்போது தந்தது. எச்செலவும் நேராமல் திருமணம் நடந்துவிட்டதே; அதனால் அம்மா கொண்டு வந்து தந்தார்."

"அப்பா இதனைத் தெரிந்தால்..."

"மகிழ்வார்;"

"அம்மாவைத் திட்ட மாட்டாரா?"

**"அம்மா - அப்பா - எதிரிட்டுப் பேசியதை நான் என் செவியால் கேட்டதே இல்லை."**

"பிறகு ஏன் உன் திருமணத்திற்கு இசையவில்லை;"

"நான் ஒரே பெண்; வீட்டோடு இருக்கும் மருமகனை அவர் எதிர் பார்த்தார். ஊரிலும் இல்லாமல், இந்தியத் தலைநகரமாம் தில்லியில் இருப்பவரை நான் விரும்பியதால் வெறுப்படைந்தார். என்மேல் அவர்க்கு உயிர்; என் அம்மாவின் மேல் அதற்கும் உயிர்; அம்மாவோ அவர் காலடி நிழல்;"

**"ஒருவர் எண்ணிய எண்ணம் மாறும்போது, கோடை இடி, மின்னல் கனமழை, காட்டு வெள்ளம், கரையுடைப்பு"** ஆகிறது. அதுவே ஆற்றில் பாய்ந்து செல்லச் செல்ல வண்ணமும் மாறி, துள்ளலும் மாறி உயிரோம்பும் சோறும் நீருமாய் அமைந்துவிடுகின்றது. **வெள்ளக் காட்சிதான் உள்ளக் காட்சி**" என்றார் அன்னம்மை.

"அருமையான விளக்கம்" என்றார் அமைந்து கேட்ட நல்லையா"

'**நடமாடும் தெய்வம்**' என்று அவர் உங்களைச் சொன்னது **எனக்குக் கற்பித்த பாடம்**" என்றாள் பொன்னி.

அம்மா அருளாயி, தன காதோடு காதாகச் சொல்லியதை நினைத்துக் கொண்டு, காலையில் எழுந்தாள் பொன்னி. வீட்டு முற்றம் பெருக்கினாள். கோலமிட்டாள். காலை உணவு தொடர்பான செயலில் ஈடுபட்டாள். மாமி காலை தேநீர் குடிப்பதை அறிந்திருந்தாள்.

பல் விளக்குங்கள். தேநீர் குடியுங்கள். வெந்நீர் போடுகிறேன்; நீராடுங்கள் என்றாள்.

சொல்லாமலே எல்லாமும் செய்தது, மாமிக்குச் சற்றே குளிரத் தொடங்கியது.

"நான் குளிக்க நேரமாகும்" என்றாள். "நான்தான் சமையல் செய்கிறேனே! நீங்கள் நீராடலாம்" என்றாள். வெந்நீரில் குளிக்கும் போது அதுவும் குளுமையூட்டியது. மாமி தனம், நீராடி வந்தாள்.

மாமா படத்தின் முன், பற்றி கொளுத்தி விளக்கேற்றி வைத்துவிட்டு மாமியை அழைத்தாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும், சென்றாள். மாமா படத்தின் முன் பணிந்து வணங்கி, மாமி காலில் விழுந்தாள்.

தன் கையில் வைத்திருந்த **இரட்டை வடத்தை** எடுத்தாள். **கும்பிட்டுக் கொண்டே மாமி கழுத்தில் போட்டாள்.** மாமி பூரிப்போடு, **'எனக்கா'** என்றாள்.

"ஆம்; **நீங்கள் தானே என்னவரைப் பெற்ற குலதெய்வம். உங்களுக்குத் தான்.**"

"பத்துச் சவரன் இருக்கும் போல் உள்ளதே!"

"எவ்வளவு இருந்தால் என்ன?"

"அவரோ, எங்கள் வீட்டிலோ இப்படிப் போட்டதில்லை" என்ற தனம், பொன்னி தோளைத் தொட்டு "நீ பொன்னம்மா இல்லை; **'பொன்னரசி"** என்றாள். கைச்செலவுக்கு உங்களிடம் இருக்கட்டும் என்று பத்தாயிரம் உருவா கொடுத்தாள். மேலும் பையில் இருந்து **குட்டிமறி தின்னும் அளவு வெற்றிலை, மெல்லிய *சீவல்*, பாக்கு,**

**வண்ணமிக்க சுண்ணாம்புக் கூடு எனத் தந்தாள். அனல் மூட்டாதே பொங்கல் பானை பொங்கி வழிவது போலப் பொங்கினாள் மாமி.**

பொன்னரசி, மாமா படத்தின் பக்கம் மாமியை நிறுத்திப் படம் எடுத்துக் காட்டினாள்.

"நீயே படம் எடுப்பாயா?"

"இதோ பாருங்கள்" என்று எடுத்த படத்தைக் காட்டினாள். பொன்னியைக் கையைப்பிடித்து அணைத்து மார்புறத் தழுவி, உச்சியில் முத்தம் தந்தாள்.

"இப்பொழுது சாப்பிடுகிறீர்களா?"

"நான் சாப்பிடப் பொழுதாகும். ஆக்கிவிட்டாய்; போட்டுண்ண மாட்டேனா?"

"படித்த பெண்ணாக இருந்தாலும் நீ பிடித்த மருமகள் என்று சொன்னவள், நல்லையன் வீட்டு முற்றத்திற்குப் போனாள்."

நல்லையன் மட்டுமில்லை அன்னமும் வியந்து போயினர். "அம்மா வா! உன் வீடுதானே இரண்டு வீடும்" என்றார் நல்லையன். **தனம், நம்மையெல்லாம் ஒன்றாக்கிவிட்டாள் மருமகள் பொன்னரசி என்றாள்!**

இரட்டை வடம் செய்த வேலை, இரட்டை, 'ஒற்றைக் கொக்கி இணைவில் நிற்பது போல' இணைந்து விட்டது! "பிறகு வருகிறேன் என்று இரட்டை வடத் தொங்கல் வட்டத்தின் வனப்பைப் பாத்துக் கொண்டே சென்று கண்ணாடி முன் நெடும்பொழுது நின்று அவளுக்குள் அவளே நகைத்துக் கொண்டாள்; புது நகை செய்த வேலை சற்றே நேரத்தில் புதுப்பிறவியாக்கிவிட்டது."

ஐஐஐ

## 5. பணப்பெட்டி

நல்லையாவை அவர் பழைய மாணவர் **பழனி** பார்க்க வந்தார்.

ஆசிரியரை வணங்கிய அவரை அழைத்துக் கொண்டு உள்ளே செல்ல, பொன்னியைக் கண்டார். **ஐயா, பொன்னி என் தங்கை;** ஊருக்கெல்லாம் **பணப்பெட்டியாக** இருக்கும் **என் பெரியம்மா அருளாயி மகள்;** இங்கே....

“அவள் என் தம்பி மனைவி.”

“படையில் இருக்கும் செல்லையா மனைவியா? திருமணச் செய்தியே தெரியாதே.”

“எளிமையாகக் கோயிலிலே மணம் செய்து, பதிவகத்தில் பதிந்தது. எல்லாம் தம்பி விடுமுறை முடிந்து போகுமுன் ஒரு மாதத்துள் நடக்க நேர்ந்தது. அதனால் நாங்கள் மட்டும் இருந்து நடத்திவிட்டோம் ” என்றார்.

பொன்னி அவரை வணங்கினார். அன்னம்மை தேநீர் கொண்டு வந்தார். பழனி எழுந்து வணங்கினார்.

“உங்கள் மணம் போலவே தம்பி மணத்தையும் நடத்திவிட்டீர்கள். சரி எல்லாம் நல்லதே” என்றார்.

“பழனி நீங்கள் வந்தது?”

“என் ஊர் **தோப்பூர்** என்பது உங்களுக்குத் தெரியும். என்னோடு உங்களிடம் படித்த மாணவர்கள் பலர் **மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, உருசியா, நார்வே** என வேலை பார்க்கப்போய் நல்ல நிலையில் உள்ளார்கள்.”

அவர்கள் நல்ல நிலையில் இருந்தாலும், அவர்களின் பெற்றோர்கள் முதுமையில் தக்க துணையும் உதவியும் இல்லாமல் துயரப்படுகின்றனர். கூப்பிட்ட குரலுக்கு ஆள் இல்லாமல் செல்வம் குவிந்து கிடந்து என்ன பயன்? என் பெற்றோர்கள் முதுமைக்கு முன்னரே

போய்விட்டார்கள். அவர்களுக்கு உதவ எனக்கு வாய்க்கவில்லை. நம் நண்பர்கள் அன்பர்களின் முதியோர்களை அவ்வப்போது காணுமாறு நேர்ந்தால், என் உள்ளம் உருகுகிறது. உருகி இரண்டு சொல் ஆறுதல் சொல்லி என்ன பயன்? **ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று நானும் என் மனைவி பூம்பாவையும் எண்ணினோம்.**

“பூம்பாவை உங்கள் மனைவியா என அன்னம் வினவினார்.”

“ஆம் அம்மா”

அவள் என் மாணவி நல்ல பிள்ளை என்றார்.

“அவள் துணையும் இருந்ததால் தான் என்னால் இத்திட்டம் கொள்ள முடிந்தது ” என்றார்.

நல்லையா, “முதியோர் இல்ல இடம் – கட்டுமானம்?” என்றார்.

“என் சொந்த ஊர் தோப்பூர். என் தந்தையார் வைத்திருந்த நன்செய்யும் புன்செய்யுமாகப் பத்துக் குறுக்கம். அதில் புன்செய் ஐந்து குறுக்கத்தின் ஒருபகுதியில் நான்குபேர் தங்கும் அறை **நான்கு**. இரண்டு பேர் தங்கும் அறை **எட்டு**. தனித்தனி தங்க **எட்டு**. என நாற்பது பேர் தங்கவும், ஓய்ந்து இருக்கவும் உரையாடவும் ஒரு கூடமும், அமர்ந்துண்ணும் இடம் என எல்லாமும் கட்டி முடித்தாயிற்று. அதன் **திறப்பு விழாவுக்கு அம்மா உடனாக வந்து நீங்கள் திறந்து வைத்து விளக்கேற்ற வேண்டும்.**” என்றார்.

முதியவர்கள் தங்க உண்ண ஊதிய நோக்கமில்லாத கட்டணம், உண்டு. சமையலாள், மற்றை வேலையாள், பொருள்கள் வாங்க, வேண்டுவ தர ஓர் அலுவலர் என எல்லாம் ஏற்பாடு ஆயிற்று. **மேற்பார்வை செய்யவும், கணக்கு வைக்கவும் நம்பகமான ஒருவர் வேண்டும். பாதிப்பேர்க்குமேல் பெண்களும் வரவுள்ளனர்.** திறப்பு விழாவுக்கு அழைப்பதோடு, மேற்பார்வைக்குத் தக்க ஒருவர் வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் வந்தேன்” என்றார் பழனி.

“படிக்கும் போதே தொண்டர் படையில் இருந்தீர். தொண்டு உள்ளமும் இருந்தது. இப்பொழுது வீழ்துகள் பலவிட்ட **ஆலமரமாகத் திட்டமிட்டுள்ளீர்கள்**; எங்கள் பாராட்டும் வாழ்த்தும் உமக்கு என்றும் உண்டு” என்றார் நல்லையா.

“தங்கை பொன் எங்கும் வேலைக்குப் போகிறாரா? திருநகரில் படித்து, மதுரையில் கல்லூரியில் படிப்பதாகக் கேள்விப்பட்டேன். ”

“ஆம், அவள் மதுரையில் இளங்கலை – தமிழ்ப் பட்டம் பெற்றார்” என்றார் நல்லையா.

“தங்கை இல்லாத எனக்குத் தங்கையாகவும், முதியோர்களுக்குத் தாயாகவும் செவிலியாகவும் அவர் அங்கு வந்தால் விளங்குவார்.” என்றார் பழனி.

“திறப்பு விழா அன்று எல்லாம் நல்லபடியாக முடிவு செய்து கொள்ளலாம்.”

“நிறையச் செலவாகியிருக்குமே!”

“கையிருப்புக் கொண்டே எல்லாம் செய்தேன். என்னுள் கொண்ட கொள்கை ஒன்று.”

“கடன் கொண்டான் – துன்பம்

உடன் கொண்டான்

கடன் கொடுத்தான் – நட்பை

உடன் கெடுத்தான்”

என்பது, இக்கொள்கையால் உள்ளது கொண்டு செய்வது என்னும் உறுதிப்பாட்டில் இருப்பதால் எனக்கு எவ்விடரும் இல்லை என்றான்.

நல்ல கொள்கை

ஐயா, நீங்கள் உங்கள் கொள்கையாக வகுப்பில் கூறியது இது என்றான் பழனி. புன்முறுவல் பூத்தார் நல்லையா.

ஃஃஃ

## 6. அரிய விருது

பொன்...

"அப்பா..."

"பழனி, அம்மாவைப் '**பணப்பெட்டி**' என்றாரே. என்றார். அவள், **குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.**"

"அப்பா, என் அம்மா **அருளாயி** மட்டுமல்லர்; ஏழை எளிய குடும்பத்தவர்க்குப் **பொருளாயி**. "

கூரை, குடிசைகளில் இருப்பவர்கள் தங்கள் பணத்தை அம்மாவிடம் ஒப்படைத்து மீண்டும் வேண்டும்போது வாங்கிக் கொள்வார்கள். அவரவர் பெயரில் தனித்தனி உறையிட்டு வைத்திருப்பார். **வட்டி தராத - பெறாத - வங்கி**; அதனால் அவ்வாறு சொன்னார். அந்த உறைத்தொகை, அப்படியே வைத்திருப்பதை அல்லாமல் எதற்கும் எடார்; தொடார். வாங்கும்போது தொகையைச் சரியாக எண்ணி உறையில் போடுவார்; தரும்போதும் சரியாக எண்ணித் தருவார்! பாதுகாப்புப் பெட்டகம் வைப்பகத்தில் இருப்பதற்கு **முன்னை வைப்பகம்** நடத்தியவர் அம்மா என்றாள். அன்னம்மாளும் கேட்டுக் கொண்டே சமையலை முடித்தார்.

"பொன், நீ பெரிய ஆள்! சல்லி கட்டுக்காரனும் அடக்க முடியாத முரட்டுக்காளையை அடக்கி விடுவது போல, **மாமியை எப்படிச் சிரித்த முகத்தோடு வரச்செய்தாய்! பெரிய மோடி வித்தையாக அல்லவா உள்ளது" என்றார் அன்னம்**. அம்மா, மதுரைச் சந்திப்பின்போது என்தாய், என்காதோடு காதாகச் சொன்னதைச் சொன்னவாறு செய்தேன்" என்று நடந்ததையெல்லாம் விரிவாகக் கூறினாள்.

"இங்கே எட்டிப்பார்ப்பதே பாவம் என்னும் மாமி பளிச்சிட்ட இரட்டை வடம் காட்டத்தான் வந்திருக்கிறார்."

"அம்மா எனக்கு முத்தம் தந்து ஒருவிருதும் வழங்கியுள்ளார்."

"என்ன விருது?"

“நீ பொன்னம்மா இல்லை! '**பொன்னரசி**' என்பது அது! எங்களால் ஆண்டுக் கணக்கில் முடிக்க முடியாததை ஒரு மணிப்பொழுதில் முடித்துவிட்டாய்; இனி எங்களையும் ஏறிட்டுப்பார்ப்பார்; பத்துச் **சொடுக்கிகள்** இருந்தாலும் உரிய **சொடுக்கியைப் போட்டால்தானே மின்விளக்கு** எரியும்; **பணப் பெட்டியைப் பாராட்டுவதா? பொன்னைப் பாராட்டுவதா?**”

**“என் அப்பா அம்மா ஆகிய உங்களைத்தான் எல்லாப் பாராட்டும் சேரும்.** நான் மாமி சாப்பிட்டாரா எனப் பார்த்து வருகிறேன்” என்று தனம் இருக்கும் பக்கம் சென்றாள். 'மாமி' சாப்பிட்டீர்களா?

“சோறும்” ஆக்கிவிட்டாய்! குழம்பு சாறு தொடுகறிகளும் வைத்துவிட்டாய்; இட்டவி கரைதுவையல் முன்னால் இருந்தது. எல்லாவற்றையும் சுவை பார்த்தேன். **உன்கையைக் கொடு** என்று பிடித்து **“அமுதக்கை”** என்றார். படித்தவள் சமைக்கமாட்டாள் என்று நினைத்தால், **சமையல் தொழிலே செய்பவளையும் வந்துபார்** என ஆக்கிவிட்டாயே! நானே பருத்தவள். இனி, ஊதிப்போவேன்; என்றாள் தனம்.

“இரவுக்கு வேண்டியதை அங்கேயே ஆக்கி நான் உங்களுக்குக் கொண்டு வந்து விடுவேன்.”

“ஆமா, இரண்டு சமையல் எதற்கு? அப்படியே செய்” என்றார்.

“அப்பா, உங்களை ஊரே நல்லையா என்று கொண்டாடுகிறது. அம்மாவைக் குடிகாரன் கண்டாலும் பத்தடி தள்ளிப் போவான். உங்களை ஏன் மாமி வெறுத்து ஒதுக்கினார்.”

**“பொன், இதை உன் அம்மா அன்னத்திடமே கேள்.”**

“அப்பா சொல்லாமல் தட்டிக்கழித்து அம்மாவினிடம் கேட்கச் சொல்கிறீர்கள். இதற்குக் காரணம் இருக்கும்.” அப்பொழுது அன்னம் தலைகாட்டினார்.

“அன்னம் பொன் என்னவோ கேட்க வேண்டுமாம்!”

“என்ன, கேள்;”

"அப்பாவையும் உங்களையும் மாமி ஒதுக்கியதேன்?"

"அவர் சொல்லமாட்டாரே;"

"ஆம்; அதனால்தான் உங்களைக் கேட்கிறேன்."

"அவர் ஊர்ப்பிள்ளைகளுக் கெல்லாம் கல்விக்கண் தருபவர். அவர்க்கு மாமி, பள்ளிக் கூடத்தையே எட்டிப்பாராத ஒருத்தியை அவள் கழுத்திலே காதிலே கையிலே கிடந்த தங்கத்துக்கும் வளமான வீடு சொத்துக்கும் ஆசைப்பட்டுக் கட்டி வைக்கத் திட்டம் போட்டார்."

இவர் பாவேந்தர் **குடும்ப விளக்கு, இருண்ட வீடு படித்தவர். அழகின் சிரிப்பில் தோய்ந்தவர்; தமிழியக்கம் இவர் மனப்பாடம்.** அதனால்,

பாரதியார் சொன்ன,

கல்வி இலாததோர் ஊரினைத் தீயினுக்கு இரையாக மடுத்தல் என்பதைக் கொள்ளாமல்,

**கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம் ஆங்குண்டாம்** என்பதைக் கொண்டவர்.

இவர் தொடங்கிய பள்ளி வளர வளர இவரும் வளர்ந்து உயர்நிலை மேல்நிலை ஆசிரியராய் விளங்கிய நிலையில் வேலை வாய்ப்பு விளம்பரம் கண்டு வேலைக்கு வந்தேன். என் ஊர் **தென்பரங்குன்றம்.** தொடர் வண்டி நிலையம் பக்கம்; ஆதலால் உள்ளூர்ப்பள்ளி என விரும்பி வந்தேன். வேலை வாய்த்தது. ஆண்களும் பெண்களும் படித்த பள்ளி. ஆசிரியர்களும் அப்படியே; அந்த நிலையில் இவருக்கு என்பணி, திறமை பிடித்திருக்கிறது;

ஒருநாள் எங்கள் வீட்டுக்கு இவர் வந்தார். அப்பா அம்மா இருந்தனர். இவரைக் கண்டதும் முன்னே சென்று வணங்கி, **மாலையில் உலாவ வந்தீர்களா?** என்றேன். இல்லை, உங்கள் அப்பா அம்மாவைப் பார்க்க வந்தேன்" என்றார்.

நான் எங்கள் **தலைமையாசிரியர்** உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என, என்னவோ ஏதோ எனப் பதறிப்போய் முன் வாரத்திற்கு வந்தனர்; வணங்கினர்.

"உள்ளே வாருங்கள் என அழைத்து இருக்கச் செய்தனர்."

"அன்னம் நல்ல ஆசிரியர்; திறமையானவர்; குடும்பப் பாங்குள்ளவர். **அவரை யாருக்காவது மணம் செய்ய ஏற்பாடு செய்துள்ளீர்களா?"**

"நாங்கள் மாப்பிள்ளை பார்த்தோம். அன்னம் நான் இப்பொழுது மணம் செய்ய விரும்பவில்லை. **என் தங்கை படிக்கிறாள். நீங்கள் முதியவர்கள். வருவாய்க்கு வழிபார்த்துத், தங்கை படிப்பு முடிந்தபின் பேசலாம்** என்று நிறுத்திவிட்டாள், என்னும் போது, வட்டை குவளையில் பால் கொண்டு வந்து கொடுத்து ஐயா, பருகுங்கள்" என்றேன்.

அம்மா, அப்பாவோடும் அம்மாவோடும் அமருங்கள். நான் வந்தது பள்ளி தொடர்பான செய்தியில்லை. **வாழ்க்கை தொடர்பான** செய்தி என்றார். திகைப்போடு அமர்ந்தேன். நான் என் குடும்ப நிலைகருதி என் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். **நீங்கள் பள்ளியில் உங்கள் கடமை தவிர்த்து எதிலும் தலையிடுவது இல்லை. ஓய்வு நேரத்திலும் ஆசிரியர் அறை செல்லாது விளையாட்டுக்கு என மாணவர் வெளியே போன வகுப்பில் இருந்து மாணவர்களின் ஏடுகள், தேர்வுத்தாள்கள் திருத்துபவர்கள், அந்தப்பொறுப்போடு என் குடும்பப் பொறுப்பும் நீங்கள் ஏற்றுக் கொள்ள இசைந்தால் இரட்டை நலமாமே என எண்ணி அப்பா, அம்மா, உங்கள் இசைவு வேண்டிவந்தேன். உங்களினும் நான் ஆறு வயது மூத்தவன் என்னும் உண்மையை நான் சொல்லாமல் இருக்கக் கூடாது" என்றார்.**

நான் படபடப்பானேன்; வாய்ச் சொல் வரவில்லை, தடுமாறினேன். அப்பா அம்மா கையைப் பற்றித் தாத்தா பாட்டி படம் மாட்டியிருந்த சுவர்ப்பக்கம் நிறுத்தினேன். "ஐயா, நீங்கள் கூட நில்லுங்கள்" என்றேன்.

மூவரும் ஒன்றாக நிற்க, **நீங்கள் நான் வணங்கும் தெய்வங்கள்; உங்கள் முடிவு என் முடிவு என்று கீழே விழுந்து வணங்கினேன்;**

**ஐஐஐ**

## 7. திருமணக் கதை

"பொன், உன் திருமணக்கதை என்ன?"

"அப்பா, உங்களைப்போல் 'அவரைக் கேளுங்கள்' என்று நான் சொல்ல மாட்டேன். நானே சொல்கிறேன்."

"அம்மா நீங்களும் அப்பாவோடு அமருங்கள் என்று அன்னத்தை அமரச் செய்தாள்."

அவர் படித்த கல்லூரி ஆண்கள் கல்லூரி. நான் படித்த கல்லூரி பெண்கள் கல்லூரி. ஆகவே கல்லூரிக் காதலோ, போக்குவரவு வண்டிக் காதலோ எங்களுக்கு இல்லை.

அவர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறுவார். நான் தமிழ்க் கட்டுரை, கதை, பாடல், சொற்பொழிவு என்னும் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெறுவேன். இவை மாவட்டப் போட்டிகள் ஆதலால் மாவட்ட ஆட்சியரே வழங்குவார்.

ஓர் ஒருமணிநேர விழாவில், அவர் நாலைந்து முறை நான் நாலைந்து முறை மாறி மாறி மேடை ஏறி இறங்குவோம். இறங்கினாலும் மேடையில் கீழே இறங்கியதும், அவர் என்னைப் பாராட்டுவார். நான் அவரைப் பாராட்டுவேன்.

இந்தப் பாராட்டு இருவர் இளங்கலை மூன்றாண்டும் தொடர்ந்தது. படிப்பு முடியப்போகிறது. இனிப்போட்டியில்லை; பாராட்டு இல்லை என்று கலங்கினார். நானும் கலங்கினேன். அவரால் தாங்கமுடியவில்லை. என்னாலும் தாங்கமுடியவில்லை. என்கைத் துணியால் அவர் கண்ணீரைத் துடைத்தேன். அவர் கைத்துணியால் என் கண்ணீரைத் துடைத்தார்; அவர் சொன்னார்; "இது நம் கடைசிச் சந்திப்பு இல்லை;"

முதல் சந்திப்பு; **நம் இணைந்த வாழ்க்கையில் முதற் சந்திப்பு**

"எவ்வளவு நாளும் காத்திருப்பேன்;"

உங்களை நோக்கிய காந்தமுள்! என்றேன். அவரும்'அப்படியே' என்றார். வீட்டுக்குத் தெரியாமல் நான் வந்ததும் பதிந்ததும் நீங்கள் செய்தவையே என்றாள்.

செல்லையா புறப்படும்போது தாயார் நடந்து கொண்டமுறை தன்னினும் தன்னை நம்பிவந்த பொன்னை வருத்துமே என்று எண்ணியபோது, அண்ணியார் அண்ணனார் வந்ததும், பொன்னை அரவணைத்துச் சென்றதும், அவர்கள் உயரிய தன்மைகளை இளமைமுதலே அறிந்திருந்தமையால் ஆறுதல் பெற்று மதுரைச் சந்திப்புக்கு வர, பொன்னின் தாய் அருளாயி வந்து அணைத்துத் தழுவியதும் ஓரளவு நிறைவுதர வண்டியின் ஓட்டம் போல் எண்ணவோட்டமும் ஓடியது செல்லையாவுக்கு.

விடுமுறை ஒரு திங்களை நீட்டித்து இருதிங்களாக்க முயன்ற முயற்சி பயன்தராமை தன்னையன்றிப் பொன்னையும் வருத்தும் என்று எண்ணினான். வீட்டை நோக்கினால் நாட்டுப் பணித்தடை. நாட்டை நோக்கினால் வீட்டுத்துயர். வீட்டுத் துயரைத் தட்டிக் கழிக்கலாம். நாட்டுப்பணியைத் தட்டுவது தன்பொறுப்பில் இல்லை எனப்பலப் பல எண்ணிக் கொண்டு கண்ணயர்ந்தான். எழுமூரில் இறங்கி, நடுவண் நிலையத்தின் மாடியில் அமைந்த அறை ஒன்றில் தங்கினான்.

பொன்னியின் நினைவு வருத்தவே செய்தது. தானும் அவளும் **சந்தித்த முதல் நாளை நினைத்தான்**.

"அவள் யார் தெரியாது."

"அவள் பேர் அங்கே படிக்க நான் கேட்டேன், தன்னைப்போல் அவள் பெயர் பலமுறையும் படிக்கக் கேட்டான். தான் ஏறிட்டுப் பார்த்தும் அவள் ஏறிட்டுப் பார்க்கவில்லை, ஆனால், இறங்கும் படிக்கட்டை ஒட்டி நின்றாள். உன் வெற்றி தொடரட்டும்" என்றாள்.

"நானும் உன் வெற்றி தொடரட்டும் என்றேன்." ஒவ்வொரு முறையும் கை நீட்டினேன், அவள் விருதுடன் கீழே இறங்கும்போது; அவள் தவறாமல், வணக்கமிட்டாள்;

அடுத்த ஆண்டில், "உன் ஊர்" என்றேன்.

“திருநகர் என்றாள்” அவள்.

“உன் ஊர் என்றாள்”

“தென்னகர் என்றேன்”

“கையை நீட்டினையே, நாளை நம் வீட்டில் இருந்து கை நீட்ட எட்டுமா?” என்றாள்.

“நான் தலை தாழ்ந்தேன்”

“வணக்கம் போட்டால் எட்டுமா?”

“எட்டும் என்று தானே, கோயில் கோபுரம் நோக்கி கும்பிடுகிறார்கள்.”

“அப்படியானால், காவல் துறை கை நீட்டிப் போக நிற்க வைக்கவில்லையா?”

“உனக்கு ஆடல் திறத்தோடு, சொல்லாடல் திறமும் உள்ளது.”

“நீ உன் பொழிவால் கூட்டத்தைக் கொள்ளை கொள்கிறாய்.”

“நீ உன் ஆட்ட ஓட்டங்களால் உலகையே கொள்ளை கொள்வாய்;”

கடைசி விழாவின், நிறைவில் இனி,

“நாம் சந்திப்போமா?”

“சிந்திக்க வேண்டியவன் நீ.”

“பொட்டில் அடிப்பதுபோல் அடிக்கிறாய்”

“இல்லை, மெட்டி போட அழைக்கிறேன்” என்றாள் – ஊடே ஊடே எண்ணிக் கொண்டே சென்றான் செல்லையா.

ஜஜஜ

# 8. முதியோர் இல்லம்

முதியோர் இல்ல அழைப்பொடு வந்தார் பழனி. பெரியப்பா பெரியம்மா முன்னிலை; நீங்களும் அம்மாவும் முதியோர் இல்லத் திறப்பாளர். பூம்பாவை வரவேற்பு. பொன் நன்றியுரை. வந்துள்ள முதியோர் சார்பில் ஒருவர் வாழ்த்துரை எனத் திட்டப் படுத்தியிருந்தார்.

"உரிய பொழுதில் வந்து விடுவோம் என்றார் நல்லையா;"

"அப்பா, என் அப்பா அம்மா வருவார்கள் என்று எண்ணுகிறீர்களா என்று பழனி போனபின் பொன் கேட்டாள். பழனி ஒப்புதல் கேட்டுத்தானே அழைப்பில் போட்டிருப்பார். பொதுவகையில் எவர்க்கும் நாம் எண்ணுமாறே எல்லாமும் நடக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. அவரவர்க்கும் தனித்தனி நோக்கங்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், விருப்பு வெறுப்புகள் உண்டு என்பதை அப்பொழுதில் மறந்து விடுவார்கள். கொஞ்சம் செல்லச் செல்ல பொங்கும் பாலில் நீர் தெளிக்கத் தணிவது போல் தணிந்து இயல்நிலைக்கு வந்துவிடுவார்கள். உன்னை எதிர்பார்த்திருக்க மாட்டார். நீ அவர்கள் மேடைக்கு வந்ததும் காலில் விழுந்து வணங்கு; '**நல்லா இரு**' என்று வாய்தானே கூறிவிடும்; அச்சமோ, கலக்கமோ இல்லாமல் உன்னைத் தூக்கி வளர்த்த அப்பா என்ற ஒரே எண்ணத்தோடு பழைய அன்பு மாறாமல் இரு" என்றார்.

அன்னம் வந்தார். "இசைவு கேட்கப் போன பழனியிடம் ஏதாவது சொல்லியிருப்பார் என்றால், உன்னை, மேடையில் நன்றி சொல்ல அவர் போட்டிருக்க மாட்டார். ஒருவழி பூம்பாவை வழி நான் செய்கிறேன். மாமி போல் அவரும் நம்மோடாகி விடுவார்" என்றார். விழா மேடைக்கு அழைப்பில் உள்ளவர்கள் எல்லாரும் அழைக்கப்பட்டு அமர்த்தப்பட்டனர்.

பொன்னை மட்டும் அழைக்கவில்லை; நிகழ்ச்சி தொடங்கியது. தமிழ் வாழ்த்துடன் தொடங்கியது.

பூம்பாவை வரவேற்பார் என்றார் பழனி.

பூம்பாவை ஒலிவாங்கியை வாங்கி அவையை வணங்கி, இன்று இங்கே நிகழும் விழாத் தலைமை வியப்பானவர்கள். என் ஆசிரியர்

மேன்மைக்குரிய அன்னம்மை; என்னவர் ஆசிரியர் மேன்மைக்குரிய நல்லையா; இப்படி எங்கள் இணையர்க்கு இணையராம் ஆசிரியர் இந்த முழுமதி முதியர் இல்லத் திறப்பு விழாத் தலைமை ஏற்றது "எல்லோரும் ஒன்றாக இணைக! இனிதாக வாழ்க" என்று புகட்டும் பாடம்;

அடுத்து முன்னிலை ஏற்கும் இணையர்கள் என்னவர்க்குப் பெரியப்பா பெரியம்மா; என்னவர்க்கு பெற்றோர் இல்லாக் குறையைத் தாமே பெற்றோராக இருந்து இந்நிறுவனம் எல்லாவகையிலும் முன்னிலையடைய வேண்டும் என்று எண்ணும் முழுமதி எண்ணத்தார்.

என்னவர்க்குத் தங்கை இல்லை என்னும் குறையை மாற்றி, எனக்கு நாத்துணையாக வாய்த்தது - முன்னிலையர் பெறுதற்கு அரிய பேறாக வாய்த்தது. உங்கள் அனைவர்க்கும் பேர்த்தியாய் - தாயாய் - செவிலியாய் - மருத்துவியாய் விளங்க இருக்கின்ற பொன், **மேற்பார்வையாகப் பணி**யேற்க இசைந்துள்ள வாய்ப்பை நாங்கள் அனைவரும் கிட்டுதற்கு அரிய பேறாகக் கருதுகிறோம்.

ஒரே ஒருசொல்; "நாம் அனைவரும் ஒரே குடும்பத்தவர்" என்பது என்று கூறித் தலைமையர் இல்லத் திறப்பை நிகழ்த்தி ஒளிவிளக்கேற்ற வேண்டிக் கொள்கிறேன்" என்றார்.

## 9. ஊருக்கும் நாட்டுக்கும்

நல்லையா கல்வெட்டைத் திறந்தார்.

அன்னம் அம்மையார், முன்னிலையர், பழனி, பூம்பாவை விளக்கேற்றினார்.

தலைமையேற்ற எங்கள் ஆசிரியப் பெருமக்களுக்கு நாங்கள் மாலை சூட்டுகிறோம் என்று பழனியும் பூங்கோதையும் மாலை சூட்டினர்.

பொன், முன்னிலையராம் தம் தாய் தந்தையர்க்கு மாலை சூட்டுவார் என்றதும் பொன் மேடையேறிப் பெற்றோரைக் காலில் விழுந்து வணங்கிக் கண்ணீர் மல்கத் தம் பெற்றோர் இருவருக்கும் மாலை சூட்டினார். தங்கவேல் மகளைக் கட்டியணைக்க, தாய் அருளாயி அரவணைக்க, இருவரும் தங்கள் கழுத்து மாலையைப் பொன்னுக்குச் சூட்ட, கூடியவர்கள் அனைவரும் மகிழ்ந்து கைமுழக்கம் செய்தனர். தங்கள் இருக்கையின் ஊடே அமர்த்திக் கொண்டனர். பூம்பாவை ஒலிவாங்கி முன் சென்று இன்னொரு பெருமகளார், இப்பெருமக்களையெல்லாம் நாம் ஒன்றாகப் பெறுதற்கு உதவிய பெருமையர் தனம் அம்மையார்; அவர் தம் கணவனைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டவர். தம்மக்களையும் மருமக்களையும் உற்றார் உறவையும் தம் கண்மணிகளாகக் கொண்டவர், பொன் இங்கே பொறுப்பு ஏற்கிறார் என்றவுடன் என்னை முதியோர் இல்லத்தில் முதல் ஆளாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றவர் பெருமைக்குரிய தனம் அம்மையார்; அவர்க்கு இந்தப் பொன்னாடையை அருளாயி அம்மையார் போர்த்துமாறு வேண்டிக் கொள்கிறேன், என்று கூற அவையின் பெருமுழக்கத்தோடு அருளாயி வந்து தனம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பொன்னாடை பெற்ற மகிழ்வில் அவர், "ஊருக்கு ஒரு மகனையும், ஒரு மருமகளையும், நாட்டுக்கு ஒரு மகனையும், ஒரு மருமகளையும் நான் பெற்ற பெருமையால், நான் பெற்ற பேறு இப்பொன்னாடை" என்று எவரும் எதிர்பாராச் செய்தியைக் கூற அவையே எழுந்து கைமுழக்கியது; வணங்கி மேடையில் இருந்து தனம் கீழே இறங்கினார்.

"நல்லையா எழுந்து என் அருமைத் துணைவியார் அன்னம் உரையாற்றுவார்" என்றார்.

அன்னம் எழுந்தார், பெருமக்கள் அனைவரையும் வணங்கி மகிழ்கிறேன்.

இவ்வூர் **தோப்பூர்.** அமைவான பெயர். இவ்வூர் முதியரைப் பேணிக் காக்கும் **காப்பூர்.**

தணக்கன் குளம், கூத்தியார் குண்டு, நிலையூர், திருநகர், பாண்டியன் நகர், தென்னகர், திருப்பரங்குன்றம், தென்பரங்குன்றம் என்னும் சுற்றூர்களைக் காக்கும் காப்பூர் அன்று; உலகக் காப்பூர்.

இங்குள்ள முதியவர்கள் மக்கள் மருமக்கள் பேரர்கள் அமெரிக்காவில், இங்கிலாந்தில், மலேசியாவில், சிங்கப்பூரில், நார்வேயில் என வாழ்தலால் அவர்கள் பெற்றோர்களாம் நீங்கள் தங்க நேர்தலால் இது உலகக் காப்பூர் என்றார்.

முதியோர் இல்லம் பெருமையுடைய தொண்டர் பழனி இணையர் ஆக்கியது.

பழனி என்பது பின்னாளைப் பெயர். அதன் முன்னைப் பெயர் பொதினி. பதப்படுத்தப்பட்ட பனம்பாளை நீர் பதனீர்; அதுபோல் பூவில் பொதிந்த நீர் பொதிநீர்; பழனியொடு பூம்பாவையை எண்ணுங்கள் தங்கத்தை, அருளை, தனத்தை, பொன்னை, நல்லையாவை, அன்னமாம் என்னை எண்ணுங்கள். தமிழ் கொஞ்சி நடையிடவில்லையா?

இப்படித் தமிழ் கொஞ்சி நடையிடப் புலமைமிக்க சான்றோர்க்கும் யாழிசைக்கும் பாணர்க்கும், ஆடும் விறலியர்க்கும் வாரி வாரி வழங்கிய **வள்ளல் பேகன் ஆட்சி** புரிந்த இடம் பொதினியாம் பழனி;

அப் பேகனே, கார்மழை கண்டு களிப்புற்று ஆடும் மயிலைக் குளிரால் நடுங்குவதாக எண்ணித் தான் நடுங்கிக் கொண்டு மயிலின் நடுக்கம் நீங்கத் தான் போர்த்திருந்த போர்வையைப் போர்த்திய புகழாளன். அவனாண்ட பொதினிப் பெயர் கொண்ட பழனியும் பூம்பாவையும் பொன்னும் கூடி நான்மாடக் கூடலாம் மதுரைச் சங்கம்

போல, முழுமதிதோறும் சான்றோர்கள் வந்து முத்தமிழ் முழங்க ஏற்பாடு செய்வார் அவர் மாமியால் பொன்னரசி எனப் பாராட்டப்படும் பொன்; நாங்களும் முழுத்துணை நிற்போம்;

முதியோர் இல்லம் என்பது "பூங்கா, பொன்மாளிகை, குற்றாலச் சாரல், நால்வழிச்சாலை" என எண்ணுங்கள்;

செய்தித்தாள்கள், மாத இதழ்கள், எனப் படிப்பகமாகவும் நூலகமாகவும் விளங்கவும் நாங்களும் பழனி இணையரோடு இணைவோம்;

இவ்வில்லத்தை வழிபடத்தக்க தெய்வ இருக்கையாக்குவதை நீங்கள் ஒவ்வொருவரும் கடமையாகக் கொண்டால் வீடுபேற்று இன்ப உலகம் இதுவேயாம்; எங்கள் உடலுக்கு முதுமையே அன்றி, உள்ளத்திற்கு என்றும் இளமையே என்று எண்ணினால், முதியர் அல்லர்; புதியர்" என்று கூறி அமைகிறேன் என்றார்.

தலைவர் நல்லையா எழுந்தார். முழுநிலவு தோறும் தண்ணிலவுப் பொழிவோடு தண்டமிழ்ப் பொழிவும் இருப்பதால், பொன்னரசி அவர்களை நன்றி கூற அழைக்கிறேன் என்றார்.

பெற்றோரை வணங்கி, தலைவரை வணங்கி, ஒலிவாங்கிமுன் வந்து நின்று அவையை வணங்கினாள்;

மேடையில் உள்ளவர்களில் இளையள் யான்;

அவையருள் இளையளும் யான்;

யான் திருமணம் முடித்த ஒரு திங்களுள் **இத்தனை முதிய குழந்தைகளுக்கும் தாயாகும் பேற்றை வழங்கிய பெருமக்களை நன்றியோடு நினைக்கிறேன்.**

பழநாளில் நற்றாய், செவிலித்தாய், ஊட்டுதாய், ஆட்டுதாய், ஓலாட்டுதாய் என ஐவகைத் தாயர் சொல்லப்படுவர். அந்த ஐவகைத் தாயின் கடமைகளையெல்லாம் உங்கள் பேர்த்தித் தாய் செய்ய உதவுவீர்கள் என்ற நம்பிக்கையால், இவ்வாய்ப்பருளிய அனைவர்க்கும் நன்றி கூறுகிறேன்.

**வாழிய நலனே; வாழிய நிலனே;**

**வணக்கம்**

என அனைவரும் கைமுழங்கத் 'தனம்' மேடையேறினார். **"என்னை மனிதப் பிறவியாக்கிய என் பொன்னரசி சார்பாக நான் ஏற்பாடு செய்துள்ள உணவை அனைவரும் உண்டு செல்ல வேண்டுகிறேன்"** என்றார் பொன். மாமி தனம் கையைப் பற்றினாள்; **"அத்தை நீங்கள் தெய்வம். ஏன் இப்படி?"** என்று, தான் அமர்ந்திருந்த இடத்தில் - **அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையேஅமர வைத்தாள்.**

தனம் கையைஅருளும், தங்கமும் பற்றினர். நல்லையா அன்னம் சேர்ந்திருங்கள்; **'பொன்' எங்களைச் சேர்த்துப் படமெடுத்துச் செல்லையாவுக்கு அனுப்பு; அவன் பூரிப்படைவான்"** என்றார் தனம்.

**ஐஐஐ**

## 10. ஆய்தப் புள்ளி

"டே பொன், வா" என்று கட்டியணைத்தார் தங்கமணி. உன்மேல் கோவமோ, உன் கணவன் செல்லையா மேல் கோவமோ எனக்கு இல்லை;

என் ஒரே ஒரு மகள் நீ; எங்கள் இருவரின் உயிரின் உயிர்நீ. உன்னைப் பிரிந்து வாழமுடியுமா, உன்னவர் படைத்துறையில் உள்ளார்; எட்டாத் தொலைவு; என்ன நேரும் என்று தெரியாத பணி;

நல்லையாவைப் பற்றி நானே நன்றாக அறிவேன். ஆசிரியர்க்கு ஆசிரியர் அவர். அவர் மனைவி அன்னம்மை நல்ல இணை; பள்ளியைக் கலைக் கோயிலாக்க வல்லவர். உன் மாசிலா மனத்தில் ஒருவன் இடம்பெற வேண்டுமானால், அவனைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

செல்லையா புறப்படும் நாள் வேளை தெரியும். அம்மாவாவது ஏக்கத்தைப் போக்கிக் கொள்ளட்டும் என்று தான் நான் வேண்டுமென்றே அன்று வெளியூர்போனேன்; உன்னைச் சுமந்தவள் அவள். அவள் வாட்டம் தீரவாவது நான் ஓட்டம் எடுக்க வேண்டும் என்று என் நெஞ்சம் கெஞ்சியது; ஆனால் மனம் கேட்கவில்லை; உரிய பொழுதுக்கு முன் சந்திப்பு நிலைய மாடியறையின் முன் குல்லா வைத்துக் கொண்டு நின்று நீயும் அம்மாவும் கலங்கியதும் காதோடு காதாகப் பேசியதும் பை கைமாறியதும் படமெடுத்தேன்; பார் என்றார். அருளாயி குறுக்கிடவில்லை.

பொன் கூறினாள்: "அம்மா பைதந்தாலும் நீ வாங்கலாமா என்று நல்லையா அப்பா கேட்டார். அப்பாவுக்குத் தெரிந்தால் என்றார். 'மகிழ்வார்' என்றேன். என் தந்தை என்றும் என்தந்தைதான்; எனக்குத் தோப்பூர், தென்னகர், திருநகர் மூன்றும் ஆய்தப்புள்ளிகள்; இரண்டு சிறகு எழும்ப எழும்பும் பறவை போன்றது ஆய்தப்புள்ளி என்பர். மூன்றிடமும் யான் அப்போது அப்போது தங்கும் கூடுகள் என்றவள்,"

"அம்மா, அப்பா" என் கருவியில் முதல் படம் எது?

'என்னைப் பெற்ற தெய்வங்கள்'

ஆகிய நீங்கள்:

அடுத்து, 'என்னவர்'

அடுத்து, 'என்னவர் தாய் தந்தை'

அடுத்து, பெறாமல் பெற்ற பிள்ளையாய் ஏற்ற கலைத்தெய்வங்கள் நல்லையா அன்னம்மை.

ஒருநாளைக்கு எத்தனை முறை பார்ப்பேன். சரி,நாமும் உண்டு புறப்படலாம் என்றாள், மாமி தனம் சற்றே தள்ளி மரநிழலில் நின்றார்.

பொன் ஓடிப்போய், "மாமி சாப்பிடப் போகவில்லையா? உன் முதல் குழந்தை நான்; நீ எனக்கு ஊட்டாமல் சோறு இறங்காது என்றார்."

"உங்களைக் காக்க வைத்துவிட்டேன்"

"வாருங்கள் என்றாள்;"

"பொன், உன்கையை நீட்டு என்றார்."

நீட்டினாள்

"இரட்டை வடத்தை அவள்கையில் வைத்தார்"

"என்ன மாமி;"

"நான் பொன்னின் மாமி; வேறு பொன் எதற்கு;"

"மாமி"

"நான் மாமிதான்; நான் பெருமைப்படும் மருமகள் நீ, உன்னினும் சிறந்த பொன் எனக்கு எதுவும் இல்லை. உன்னைப் பிரியக் கூடாது என்றே முதல் முதியளாகப் பழனியிடம் பதியச் சொன்னேன்."

பூம்பாவை திகைத்தாள்.

மாமி சொன்னால் அவர் சொல்லைக் கேட்க வேண்டியது நம் கடமை என்றார் பழனி;

அப்பா அம்மா மாமி பொன் நால்வரும் உண்ணப் போயினர்.

ஐஐஐ

## 11. தாயில்லை பேய்

பழனி பூம்பாவை இணையராய் வழியனுப்ப வந்தனர். பொன் நாளை முதல் வேலைக்கு வரலாம். நாங்களும் இங்கேயே தங்குவதால் காலை 10 மணிக்கு வந்து மாலை 5 மணிக்குமேல் போய்விடலாம். மாமி பொன்னுடன் தங்கினாலும் சரி, தனியறை வேண்டும் என்றாலும் தந்து விடுவோம்.

நீங்கள் அனைவரும் வந்து சிறப்பாகத் திறப்புவிழா நடத்தித் தந்ததற்கு மிகுந்த நன்றி என்றனர்.

பொன் உன்திட்டம் என்றார் தங்கவேல்

இன்று மாமி, அப்பா அம்மாவுடன் போகிறேன்.

நாளை வேலை முடித்து நம் வீட்டுக்கு வருகிறேன்.

**கடல்மேல் பறந்தாலும் மலைமேல் பறந்தாலும் பறவை கூட்டுக்கு வருவது இயற்கை தரும் பாடம் இல்லையா?**

**அந்தப் பாடம் நம் எல்லோர்க்கும் தாம் என்றார் நல்லையா;** விடை பெற்றுக் கொண்டு பிரிந்தனர்.

பொன் ஒருபங்கும், பழனி ஒருபங்கும் உறவை வலுப்படுத்திவிட்டதை அன்னமும் நல்லையாவும் எண்ணிக் கொண்டு சென்றனர்.

“அன்னம் உன்னைக் கொடுமைப் படுத்திவிட்டேன்; நீ பெரிய மனத்தோடு இன்றுவரை ஒரு சொல் சொன்னதில்லை. காலங்கடந்தாவது பொன்னால் உணர்ந்தேன்” என்று சொல்லும் போது, “**மாமி எதிர்பார்த்தது வராமல் ஏமாற்றமானால் எரிச்சல் படுவது பொதுவான நடப்புத்தான்**; ஆனால் அதற்கு விதிவிலக்கானவர் உங்கள் மூத்த பிள்ளை; அவர் துணைவிநான்; பழையதை மறந்து புதுப்பிறப்பாகப் பேசுகிறீர்களே இது எல்லோர்க்கும் வருமா?” என்றாள் அன்னம். வீட்டுக்குப் போகும்போது பொன், மாமியுடன் போனாள். பொன், உட்கார். உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும். பொன் மாமி அருகில் அமர்ந்தாள்.

"பொன், உன் மாமன் நேர்மையானவர், எந்தக் குறையும் சொல்ல முடியாத அவர்க்கு ஒரு பெருங்குறை உண்டு. அவர் நினைக்கிறபடியோ, சொல்கிறபடியோ செய்யவில்லை என்றால், அவர் கண்மண் தெரியாமல் அடிப்பார் மிதிப்பார்; பலநாள் ஏறிட்டுப் பார்க்கமாட்டார். இரண்டு வேளை, மூன்று வேளை சாப்பிட மாட்டார். சாப்பாட்டைக் கொண்டுபோய் நின்றால் தட்டு வட்டைகளைத் தூக்கி எறிவார். நான், என்ன **அவர் பேசினாலும் ஊமையாக இருந்தால் தான் அவரே அடங்குவார்** வீட்டுக்குள் அவர் இருந்தால் வாய்க்குப் பூட்டுப் போட்டால்தான் பல்லுடையாமல் தப்பிக்கலாம். **அவரிடம் அடங்கி அடங்கிக் கிடந்த நான், அவர் போனதற்குப் பின்னால் அந்தக் கிளையில் ஏறிக் கொண்டேன்.**"

"படித்தவளாக எவளும் எனக்கு மருமகள் வரக்கூடாது. ஏழை எளியதாக இருக்கக் கூடாது. வந்தால் என் சொல்கேட்டு நடப்பவளாக இருக்க வேண்டும்" என்று எண்ணி என் தலையில் நானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டேன்.

நீ படித்தவளாக இருந்தாலும் பாசம் குறையாதவளாய் எனக்குப் பணிவிடை செய்ததும், என் பணப்பித்துக்கு இரட்டை வடம் போட்டதும் என்னை மனிதப்பிறவியாக ஆக்கியது; செல்லையா புறப்பட்டுப்போகும் போது நான் நடந்து கொண்டது நான் பெற்ற தாய் இல்லை; பேய் என்று காட்டியிருக்குமல்லவா!

"மாமி நீங்க நினைக்கிறது போல அவர் கவலையோடு போகவில்லை, மகிழ்ச்சியோடு போனார்."

"இதோ பாருங்கள் என்று சந்திப்பில் அம்மாவைக் கண்டது கையசைத்துப் புறப்பட்டது தில்லி அலுவலகம் சேர்ந்தது. நான் உங்களை மாமா முன்நிறுத்தி இரட்டை வடம் போடுவது, நீங்கள் என்னைத் தழுவியது, கையில் முத்தம் தந்தது, தோப்பூரில் நீங்கள் மேடையில் பேசியது, உங்களுக்கு நான் உணவு ஊட்டியது எல்லாமும் காட்டக் காட்ட, உன்னைப் பெற்று எனக்கு மருமகளாகத் தந்த தங்கத்துக்கும், அருளுக்கும் கோயில் கட்டிக் கும்பிடலாம்" என்றார்; **அன்னமும் உன்னைப் போலத்தான்**; நான் தான் பாடாப்படுத்தித் தனிக்குடித்தனம்

போகவைத்தேன்; நான் நாளை முதியோர் இல்லத்துக்கு வந்து எல்லாரோடும் சிரித்துப் பேசிக் கலகலப்பாக இருக்கத்தான் வருகிறேன். எல்லாரும் உறவு என்ற எண்ணம் வந்தபின் கட்டென்ன, காவலென்ன? நான்படுக்கிறேன். நீ அன்னத்தோடு போய் இரு, என்றார்.

**இயல்பாக எவரும் கெட்டவர் இல்லை; சூழல்கள் பலப்பல கோலங்களைக் காட்டுகின்றன.**

"காற்றை மாசாக்குபவன், நீரைமாசாக்குபவன், மண்ணை நஞ்சாக்குபவன் போல நாடுகெட, உலகு பாழாகச் செய்பவர் தம் குறையை எண்ணிப் பார்ப்பாரா? வருத்தம் கொள்வாரா? திருத்தம் ஆவாரா"

மாமி இயல்பாக நல்லவரே; என்று நினைத்துக் கொண்டே. அப்பாவும் அம்மாவும் ஓய்வெடுப்பது கண்டு அவளும் ஓய்வு கொண்டாள்.

## 12. தாமே மூலமும் முதலும்

**முழுமதி முதியோர் இல்லம் தோப்பூர்**

**புகை வகை, இல்லை**
**மதுவகை, ஒழிப்பு,**
**புலால் உணவு, தவிர்ப்பு**
**இயற்கை நலம் போற்றும் இல்லம்**

என நுழைவாயில் பக்கம் கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்ட பலகை இருந்து வரவேற்றது.

**நுழைவாயிலை அடுத்து அலுவலக முகப்பில்**

| | | |
|---|---|---|
| காலை மணி | 6.30 | தேநீர் (அ) குளம்பி |
| காலை மணி | 8.30 | சிற்றுண்டி |
| காலை மணி | 11.30 | காய்கறிச் சூப்பு |
| நண்பகல் | 1.30 | உணவு. |
| மாலை | 4.30 | மாக்கஞ்சி |
| மாலை | 6.00 | தேநீர் (அ) குளம்பி |
| இரவு | 8.30 | சிற்றுண்டி |

எவரும் முன் வாயிலில் உள்ளே உள்ள ஏட்டில் வந்தாலோ, சென்றாலோ, பொழுது பதிந்து கையொப்பமிட வேண்டும்.

செல்பேசிப் பயன்பாட்டைக் குறைக்க வேண்டுவது தேவை; முழுமதி நாளில் 6.30 முதல் 8.00 வரை பொழிவு - கலந்துரையாடல் நிகழும். படிப்பகமும் நூலகமும் அலுவலக அறையை ஒட்டி அமைந்துள்ளது; ஞாயிறு தோறும் பொது மருத்துவர் ஒருவர் நேர்காணலுக்கு வருவார். இல்லத்துக்கென மகிழ்வுந்து ஒன்றுண்டு. பகலும் இரவும் நகருந்துப் போக்கு வரவு நிறுத்தம் அடுத்தே உள்ளது. (இவை எழுதப்பட்ட பலகைச் செய்தி

பொன், மாமியுடன் வந்து அலுவலகம் போனாள். தாம் வந்ததைப் பதிவு செய்தாள். மாமியை அவள் அறைக்குச் சென்று விடுத்தாள். "இது போதுமானால் இருங்கள். இல்லையானால் என்

அறையில் தங்கிக் கொள்ளலாம்" என்றாள். "எல்லா வாய்ப்பும் உள்ளது, இதுபோதும் நான் சுற்றிப் பார்க்கிறேன் என்று சென்றாள்."

ஒவ்வோர் அறையாகச் சென்றாள். ஒவ்வொருவர்க்கும் ஒருபக்கம் இட்டு **அவர் பெயர், முகவரி, வயது, உடல்நிலை, உறவினர் மூவர் முகவரி** என்பவற்றைக் கேட்டுக் குறித்தாள். பழனியும் பூம்பாவையும் அங்கேயே இருப்பதால் இணைந்து வந்தனர். பொன் குறிப்பெடுப்பதைப் பாராட்டினர்.

முன்னேயும், உள்ளேயும் உள்ள பலகைக் குறிப்புகளைப் பொன் பாராட்டினாள். உணவு வீணாகாமல் இருக்க '**எடுத்தூண்**' முறையைக் கொள்ளல் நலமென்றார். அவர்கள் ஏற்றனர்.

பார்க்க வருவார் **பையை ஆய்வு செய்துவிடுதல் நல்லது; அது முற்காப்பும் பிற்காப்பும் என விளக்கினாள்.**

முழுமதிப் பொழிவைத் தானும் அன்னம்மையும் ஏற்பதாகவும் தக்காரை அழைத்துப் பயன் கொள்வதாகவும் கூறியது அவர்களுக்கு மிக உடன்பாடாயது. வரவு செலவு கணக்கைத் தான் எழுதுவதாகவும், பணப்பொறுப்பை அவர்களே வைத்திருக்க வேண்டும் என்பதும் நல்ல திட்டமிடலாக இருந்தது.

மாமிக்குச் சிறைச்சாலையில் இருந்து **ஓர் அறச்சாலையில் புகுந்த இன்பம் இருந்தது**. அங்கும் இங்கும் நடந்தார்; உரையாடினார். புதுப்பிறவிபோல் புது வாழ்வாகவும் அவர்க்கு இருந்தது.

காலையும் மாலையும் இசைகேட்கவும், செய்தி கேட்கவும், தக்க படம் பார்க்கவும் வாய்ப்பாக **ஒலிப்பேழை, தொலைக்காட்சிப் பெட்டி** இரண்டும் பொன்னின் தந்தை தங்கமும் தாய் அருளாயியும் கொண்டு வந்தது, அங்கே இருந்தவர்களுக்குக் கொண்டாட்டமாயது.

மூன்று திங்கள் அளவுக்குள் முதியர் நாற்பதின்மர் நிரம்பிவிட்டனர்.

எண்ணிக்கை பெருகின் பேணுதலும் கட்டமைவும் உணவு மருத்துவம் ஆயவும் தரக்குறைவுக்கு ஆட்படுத்திவிடும் என்றெண்ணி, அதே அளவில் தரச்சிறப்பு ஒன்றே மூலமும் முதலும் எனக் கொண்டனர்.

ஃஃஃ

# 13. கூட்டாஞ்சோறு

முழுமதி முதியோர் இல்லத்திற்கு ஓராண்டு நிறைந்து ஆண்டு விழாவும் முடிந்துவிட்டது. தில்லி சென்ற செல்லையா விடுமுறையில் வந்தான்.

"**கூட்டாஞ்சோறு**" உண்ண வேண்டும் திட்டம் முன்வந்தது. தங்கம் **திருநகரில்** வைத்துக் கொள்ளலாம் என்றார். தனம் **தென்னகரில்** வைத்துக் கொள்ளலாம் என்றார். அன்னமோ நல்லையாவைக் கேட்பதாக இருந்தார்.

"எல்லோருக்கும் இளைவள் நான்; ஆனால், என் பெரிய குடும்பத்தின் தாய்; என் சொற்படி என் பிள்ளைகளாகிய நீங்கள் கேட்பதாக இருந்தால் சொல்கிறேன் என்றாள்." "பொன்னரசி நீ சொன்னால் சரியாக இருக்கும் சொல்" என்றார் தனம். எல்லோருக்கும் மூத்த மாமியே ஒத்துக் கொண்டார்கள்; மாமி, **அகரம்**; அப்பா, **முதல**; அம்மா, **எழுத்தெல்லாம்**; என் வளர்ப்பப்பா, **ஆதி**; அம்மா, **பகவன்**; என்னவர், **முதற்றே**; நான், **உலகு**. ஏழுபேரும் உட்கார்ந்துள்ள வரிசை சரிதானே; **நாம் வீட்டுக் கூட்டாஞ்சோறு சாப்பிடாமல், நாளை முழுமதி நாள் ஆதலால், நம் முதியோர் இல்லத்தின் முழுமதிக் கூட்டத்தில் கூட்டாஞ்சோறு சாப்பிடலாம் என்பது என் எண்ணம்.**

எங்கள் அப்பா - அம்மா - திருமணத்துக்கு ஊரைக் கூட்டி விருந்துவைக்கவில்லை.எங்கள் திருமணத்துக்கும் ஊரைக் கூட்டி விருந்துவைக்கவில்லை.

அதனால், இதனை உலக விருந்தாக நம்முதியோர் இல்லத்து வைக்கவேண்டும் என்பது என் விருப்பம் என்றாள் பொன். **அனைவரும் ஏற்றதாகக் கைதட்டினர். "என்னரசி; பொன்னரசி;"** என்று பூரித்தார் மாமி;

அவ்வாறே ஊர்க்கூட்டாஞ்சோறு,

உலகக் '**கூட்டாஞ்சோறாகத்**' தோப்பூர்

முழுமதி முதியோர் இல்லத்தில் சிறப்பாக நிகழ்ந்தது;

**வாழிய நலனே! வாழிய நிலனே!!**

# குறிப்புக்காக....

# குறிப்புக்காக....

